ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ சிலையிலங்கு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சிலையிலங்கு ॥

திருக்கண்ணபுரம் - 1

‡சிலையிலங்கு பொன்னாழி⋆
    திண் படை தண்டொண் சங்கம் என்கின்றாளால்⋆
மலையிலங்கு தோள் நான்கே⋆
    மற்றவனுக்கெற்றே காண்! என்கின்றாளால்⋆
முலையிலங்கு பூம் பயலை⋆
    முன்போட அன்போடி இருக்கின்றாளால்⋆
கலையிலங்கு மொழியாளர்⋆
    கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ (1)

‡செருவரை முன்னாசறுத்த⋆
    சிலையன்றோ கைத்தலத்ததென்கின்றாளால்⋆
பொரு வரைமுன் போர் தொலைத்த⋆
    பொன்னாழி மற்றொரு கை என்கின்றாளால்⋆
ஒருவரையும் நின்னொப்பார்⋆
    ஒப்பிலா என்னப்பா! என்கின்றாளால்⋆
கருவரைபோல் நின்றானைக்⋆
    கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ (2)

துன்னு மா மணி முடிமேல்⋆
    துழாய் அலங்கல் தோன்றுமால் என்கின்றாளால்⋆
மின்னு மா மணி மகர குண்டலங்கள்⋆
    வில் வீசும் என்கின்றாளால்⋆
பொன்னின் மா மணி ஆரம்⋆
    அணியாகத்திலங்குமால் என்கின்றாளால்⋆
கன்னி மா மதிள் புடை சூழ்⋆
    கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ (3)

www.prapatti.com

தாராய தண் துளப⋆ வண்டுழுத
வரை மார்பன் என்கின்றாளால்⋆
போர் ஆனைக் கொம்பொசித்த⋆ புட்பாகன்
என்னம்மான் என்கின்றாளால்⋆
ஆரானும் காண்மின்கள்⋆ அம் பவளம்
வாய் அவனுக்கென்கின்றாளால்⋆
கார்வானம் நின்ற திரும்⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ (4)

அடித்தலமும் தாமரையே⋆
அங்கைகளும் பங்கயமே என்கின்றாளால்⋆
முடித்தலமும் பொற்பூணும்⋆
என் நெஞ்சத்துள் அகலா என்கின்றாளால்⋆
வடித்தடங்கண் மலரவளோ⋆
வரையாகத்துள்ளிருப்பாள் என்கின்றாளால்⋆
கடிக்கமலம் கள்ளுகுக்கும்⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ (5)

பேராயிரம் உடைய பேராளன்⋆
பேராளன் என்கின்றாளால்⋆
ஏரார் கன மகர குண்டலத்தன்⋆
எண் தோளன் என்கின்றாளால்⋆
நீரார் மழை முகிலே⋆ நீள் வரையே
ஒக்குமால் என்கின்றாளால்⋆
காரார் வயல் அமரும்⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ (6)

செவ்வரத்த உடையாடை⋆
அதன்மேல் ஓர் சிவளிகைக் கச்சென்கின்றாளால்⋆
அவ்வரத்த அடியிணையும்⋆
அங்கைகளும் பங்கயமே என்கின்றாளால்⋆
மைவளர்க்கும் மணியுருவம்⋆
மரகதமோ மழை முகிலோ! என்கின்றாளால்⋆

www.prapatti.com

கைவளர்க்கும் அழலாளர்⋆
    கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ (7)

கொற்றப்புள் ஒன்றேறி
    மன்றூடே⋆ வருகின்றான் என்கின்றாளால்⋆
வெற்றிப்போர் இந்திரற்கும்⋆ இந்திரனே
    ஒக்குமால் என்கின்றாளால்⋆
பெற்றக்கால் அவனாகம்⋆ பெண் பிறந்தோம்
    உய்யோமோ என்கின்றாளால்⋆
கற்றநூல் மறையாளர்⋆
    கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ (8)

வண்டமரும் வனமாலை⋆
    மணி முடிமேல் மண நாறும் என்கின்றாளால்⋆
உண்டிவர் பால் அன்பெனக்கென்று⋆
    ஒருகாலும் பிரிகிலேன் என்கின்றாளால்⋆
பண்டிவரைக் கண்டறிவது
    எவ்வூரில்⋆ யாம் என்றே பயில்கின்றாளால்⋆
கண்டவர் தம் மனம் வழங்கும்⋆
    கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ (9)

‡மாவளரு மென் நோக்கி⋆
    மாதராள் மாயவனைக் கண்டாள் என்று⋆
காவளரும் கடி பொழில் சூழ்⋆
    கண்ணபுரத்தம்மானைக் கலியன் சொன்ன⋆
பாவளரும் தமிழ் மாலை⋆
    பன்னியநூல் இவை ஐந்தும் ஐந்தும் வல்லார்⋆
பூவளரும் கற்பகம் சேர்⋆
    பொன்னுலகில் மன்னவராய்ப் புகழ் தக்கோரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com